*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 496/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW- 6 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.பெருமாள் த/பெ. ராம்ராஜ்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02.02.2026.**

துவக்க நேரம் 11.45 F.N

**A1, A2, A4 எதிரிகள் ஆஜர். A3 எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் உள்ள ஈச்ச ஓடை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். சம்பவம் நடைபெற்றபொழுது நல்லதங்காள்குட்டை பகுதியில் குடியிருந்தேன். கடந்த 25.01.2023 அன்று எங்களது வயலிற்கு அருகில் உள்ள சுமதி என்பவரது வயலில் அறுவடை செய்யப்பட்ட கிழங்கை எங்களது வயலின் வழியாக சுமதி என்பவர் எடுத்துச்சென்றார். என் அப்பா உடனே அவ்வாறு எங்களது வயலின் வழியாக கிழங்கை எடுத்துச்செல்லவேண்டாம் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார்.

2) இந்நிலையில், கடந்த 26.01.2023 அன்று எங்களது வயலில் எனது அம்மா, எனது அப்பா, எனது அக்கா, எனது மாமா மற்றும் நான் ஆகியோர் வேலை செய்துகொண்டிருந்தோம். அப்பொழுது எங்களது வயலின் வழியாக சுமதி மீண்டும் கிழங்கை கொண்டுவந்தார். அதற்கு என் அப்பா ஏன் இவ்வாறு எங்களது வயலின் வழியாக கிழங்கை கொண்டு வருகிறீர்கள் என்று சுமதியிடம் கேட்டதற்கு சுமதி, நாங்கள் செல்வராணியின் வயலின் வழியாகத்தான் கிழங்கை கொண்டு வருகிறோம், செல்வராணியின் நிலத்தை நாங்கள் குத்தகைக்கு

ஓட்டுகிறோம், அதனால் அவரது நிலத்தின் வழியாக கொண்டுபோகிறோம் என்று சொன்னோம். அதற்கு எனது அப்பா, அவங்க நிலத்தின் வழியாக விவசாய பொருட்களை கொண்டு செல்லுங்க, எங்களது நிலத்தின் வழியாக வராதிங்க என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார்.

3) அவ்வாறு சுமதி மீண்டும் எங்களது நிலத்தின் வழியாக கிழங்கை ஏற்றிவந்தார். நாங்கள் கிழங்கு ஏற்றி வந்த டிராக்டரை வழிமறித்து நிறுத்திவிட்டோம். அப்பொழுது வெங்கட்ராமன், பெரியசாமி, சுமதி, செல்வராணி ஆகியோர்கள் வந்துவிட்டார்கள். அதில் வெங்கட்ராமன் கையில் கொடுவாளும், பெரியசாமி அவரது கையில் உருட்டுக்கட்டையும் வைத்திருந்தார்கள். செல்வராணி வரும்பொழுதே கையில் பெரிய கிழங்குகுச்சியை எடுத்துவந்தார்.

4) பெரியசாமி என்பவர், எங்களது நிலத்திற்குள் வந்து எனது அப்பாவின் தலையில், கையில் வைத்திருந்த உருட்டுக்கட்டையால் அடித்துவிட்டார். ஏன் அண்ணா இப்படி பன்றிங்க என்று என் அப்பா, பெரியசாமியிடம் கேட்டபொழுது அப்படிதாண்டா பன்னுவோம் என்று சொல்லிக்கொண்டும், தகாத வார்த்தையால் திட்டிக்கொண்டும் மீண்டும் ஒரு முறை அடித்துவிட்டார்.

5) வெங்கட்ராமன் அவரது கையில் வைத்திருந்த கொடுவாளால் எனது அப்பாவின் இடதுபக்க தலையில் வெட்டிவிட்டார். செல்வராணி கையில் வைத்திருந்த கிழங்கு குச்சியால் எனது அப்பாவின் முதுகில் அடித்துவிட்டார். சுமதி கீழே கிடந்த கல்லை எடுத்து எனது அப்பாவின் காலில் அடித்துவிட்டார். எனது அப்பாவிற்கு இரத்தம் வந்ததால், நான் எனது அப்பாவை தூக்க சென்றபொழுது, பெரியசாமி அவரிடம் இருந்த உருட்டுக்கட்டையால், எனது முன்பக்க தலையில் அடித்துவிட்டார். வெங்கட்ராமன் என்பவர், என்னை பிடித்து கீழே தள்ளிவிட்டார்.

6) என்னை தூக்க வந்த எனது மாமாவை, பெரியசாமி உருட்டுக்கட்டையால் எனது மாமாவின் இடது பக்க முன்நெற்றியிலும், இரண்டு

கைகளின் முழங்கைக்கு கீழ் பகுதியில் அடித்துவிட்டார்கள். எனது அம்மா, அக்கா ஆகியோர் வந்துவுடன் இன்னிக்கு தப்பிச்சிட்டிங்க என்னைக்கா இருந்தாலும் உங்களை கொல்லாம விடமாட்டோம் என்று சொல்லி அங்கிருந்து ஓடிவிட்டார்கள்.

7) அதன் பிறகு அடிபட்ட நாங்கள் அனைவரும் தம்மம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டு, மேல் சிகிச்சைக்காக ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சையில் சேர்ந்தோம். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**A1, A2, A4 எதிரிகள் ஆஜர். A3 எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**1 முதல் 4 எதிரிகள் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 11.59 F.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.02.02 17:41:25 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 496/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-7 (LW-9)***

*Name / Father's Name:* ***திரு.விஜயகுமார் த/பெ. சுப்ரமணியம்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02.02.2026.**

துவக்க நேரம் 12.01 A.N

**A1, A2, A4 எதிரிகள் ஆஜர். A3 எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆத்தூர், அரசு மருத்துவமனையில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.01.2023 அன்று மதியம் 03.30 மணிக்கு நான் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபொழுது உலிபுரத்தை சேர்ந்த பெருமாள் (22) என்பவர் சிகிச்சைக்கு வந்தார்.

2) பெருமாள் என்பவரை விசாரித்தேன். அவர் கடந்த 26.01.2023ம் தேதி மதியம் 12.15 மணியளவில் ஐந்து அடையாளம் தெரிந்த நபர்கள், குச்சியால், அவரது தலை மற்றும் முதுகில் அடித்துவிட்டதாக என்னிடம் சொன்னார். அவரை பரிசோதித்தேன். அவருக்கு பின்வருமாறு காயங்கள் இருந்தன.

i) 2x0.5x0.5 cm அளவில் அவரது தலையின் நடுப்பகுதியில் கிழிந்த காயம் இருந்தது.

மேற்படி நபரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்றிதழ் வழங்கினேன். **<u>(பெருமாளின் விபத்து பதிவேட்டுடன்கூடிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)</u>.**

3) கடந்த 26.01.2023 அன்று மதியம் 03.45 மணிக்கு நான் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபொழுது உலிபுரத்தை சேர்ந்த ராம்ராஜ் (60) என்பவர் சிகிச்சைக்கு வந்தார்.

4) ராம்ராஜ் என்பவரை விசாரித்தேன். அவர் கடந்த 26.01.2023ம் தேதி காலை 11.30 மணியளவில் 10 அடையாளம் தெரிந்த நபர்கள், குச்சியால், அவரது தலை மற்றும் இடது காலில் அடித்துவிட்டதாக என்னிடம் சொன்னார். அவரை பரிசோதித்தேன். அவருக்கு பின்வருமாறு காயங்கள் இருந்தன.

i) 10x0.5x0.5 cm அளவில் அவரது வலது பக்க தலையில் கிழிந்த காயம் இருந்தது.

ii) 1x0.5 cm அளவில் அவரது இடது காலின் மேல் பகுதியில் கிழிந்த காயம் இருந்தது.

மேற்படி நபரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்றிதழ் வழங்கினேன். **(ராம்ராஜின் விபத்து பதிவேட்டுடன்கூடிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

5) கடந்த 26.01.2023 அன்று மதியம் 03.55 மணிக்கு நான் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபொழுது உலிபுரத்தை சேர்ந்த முத்தையன் (34) என்பவர் சிகிச்சைக்கு வந்தார்.

6) முத்தையன் என்பவரை விசாரித்தேன். அவர் கடந்த 26.01.2023ம் தேதி காலை 11.30 மணியளவில் 10 அடையாளம் தெரிந்த நபர்கள், குச்சியால், அவரது தலையில் அடித்துவிட்டதாக என்னிடம் சொன்னார். அவரை பரிசோதித்தேன். அவருக்கு பின்வருமாறு காயங்கள் இருந்தன.

i) 2x1x0.5 cm அளவில் அவரது தலையின் இடதுபுறம் கிழிந்த காயம் இருந்தது.

மேற்படி நபரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்றிதழ் வழங்கினேன். **(முத்தையனின் விபத்து பதிவேட்டுடன்கூடிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**A1, A2, A4 எதிரிகள் ஆஜர். A3 எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**1 முதல் 4 எதிரிகள் குறுக்கு விசாரணை**

1) பெருமாளின் விபத்து பதிவேட்டில், தன்னை அடையாளம் தெரிந்த ஐந்து நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளாரா என்றால் ஆமாம். முத்தையன், ராம்ராஜ் ஆகியோர்களின் விபத்து பதிவேட்டில், அவர்களை அடையாளம் தெரிந்த 10 நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளார்களா என்றால் ஆமாம். மேற்படி மூன்று நபர்களுக்கும் ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சொன்னால் சரிதான்.

2) மேற்படி நபர்களுக்கு ஏற்பட்ட காயம் கரடுமுரடான சாலையில் விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது.

முடிவு நேரம் 12.10 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.02.02 17:41:40 +0530

Judicial Magistrate No.2, Attur.